Vol : 9

இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

Issue : 2

Price Rs. 3

# HUNDRED VILLAGE MINISTRY

DECEMBER 2008

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विल्लेज मिनिस्ट्री ഹൺഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

Annual Subscription India Rs.25 Foreign Rs.250

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**

**நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்**




**TVGM - 2008 டிசம்பர்**

**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

எரேமியா 33 : 3

## பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.



கர்த்தருடைய கிருபையினால் **07.11.2008** அன்று சென்னை – **மீஞ்சூர்** நந்தியம்பாக்கம் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள **Christian Believers Church -** ஐ சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர் CEO தேவனுடைய மகிமைக்கென்று திறந்து வைத்தார்கள்.

நன்றி : ***Mr & Mrs. Jesuthasan***
***Mr & Mrs. Jeyaseeli Ravi - Ilford***
**Emmanuel Christian Fellowship**

**இயேசு கிறிஸ்துவே கர்த்தர்**

**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**CHIEF EXECUTIVE OFFICER**
காரியதரிசி கடித நாள்: 11.11.08.



கிறிஸ்துவுக்குள் என் அன்பு சகோதர சகோதரிகளே!

உங்கள் அனைவருக்கும் TVGM ஊழியத்தின் சார்பில் என் அன்பின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

பெத்லகேமில் பிறந்த இயேசுகிறிஸ்து, அவரை அறியாத ஒவ்வொருவரின் உள்ளத்திலும் பிறக்க கர்த்தர் தாமே கிருபை புரிவாராக!

2008 அக்டோபர் மாதம் முழுவதும் அருமையாய் நடத்தின தேவன் இந்த கடைசி மாதத்திலும் அவருடைய கிருபையினால் நம் ஒவ்வொருவரையும் நிரப்புவாராக.

இந்தியாவிலுள்ள அனைத்து பாஷைக்காரர்களுக்கும் பயன்படும் வகையில் TVGM சார்பில் ஒரு Leadership Training Centre ஆரம்பிக்கப்படவும் நம் தேசத்தில் தேவனுக்கு சாட்சியாக அநேக அரசாங்க உயர் அதிகாரிகள் எழும்பவும் வாஞ்சித்து ஜெபித்து முயற்சித்து வருகிறோம் . இதற்கு அடிப்படையாக பல ஏக்கர் நிலங்கள் தேவைப்படுகிறது. இதற்காக ஜெபியுங்கள். பின்வரும் நாட்களில் இது குறித்து விவரமாக எழுதுகிறேன்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.**

கிறிஸ்துவுக்குள்.

***Bro. Stephen Christopher***

## உள் பக்கம் ...


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| Wrapper – வாக்குத்தத்தம் | Photos |
| Wrapper - Inner | Photos |
| காரியதரிசி கடிதம் | 1 |
| கிறிஸ்மஸ் சிறப்பு செய்தி | 2 - 4 |
| Hindi, Malayalam, English | 5 - 8 |
| திருச்சி 100 கிராம ஊழியம் | 9 |
| ராதாபுரம் யூனியன் 100 கிராம ஊழிய அறிக்கை | 10 -12 |
| இயேசுவை விரும்புவோர் முகாம் | 1 3 |
| சாட்சிகள் | 14 |
| பொருத்தனைகளை செலுத்து | 15 |
| கிறிஸ்மஸ் அன்பளிப்புகள் | 16 |
| தலைமை அலுவலக தேவைகள் | 17 |
| பெண்கள் முதியோர் இல்லம் | 18 |
| தினசரி ஜெபக்குறிப்புகள் | 19 |
| காணிக்கை அனுப்பும் முறை அறிமுகப்பணி அலுவலகம் | 20 |
| போட்டோக்கள் Wrapper | W 3 |
| போட்டோக்கள் Wrapper | W 4 |




# அன்பின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்!

**என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.** எரேமியா 33 : 3

கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே!

கர்த்தருடைய வசனம் கூறுகிறது:

**பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.** ஆமென்!

11 மாதங்களாக காத்திருந்த உங்கள் வாழ்க்கையில் பெரிய காரியங்களை அறிவிக்கப் போகிற தேவாதி தேவனைத் துதியுங்கள்.

இதற்கு நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம்: **"அவரை நோக்கிக் கூப்பிட வேண்டும்"**.

**சங்கீதம் 50:15 :–** ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு. நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய்.

ஆம்! நீங்களும் தேவனை நோக்கிக் கூப்பிடும்போது, அவரை மகிமைப்படுத்தும்படியாக உங்களை ஆபத்திலிருந்து விடுவித்து பெரிய காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். ஆமென்.

**'பெரிய காரியம்'** என்றால் என்ன ? வசனம் கூறுகிறது:

நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான காரியம் தான் பெரிய காரியம் ஆகும்.

**யோபு 5 : 19** ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்.

ஏனெனில் **'அவர் நாமம் அதிசயமானவர்'** அல்லவா ?

அப்படியானால் பெரிய காரியம் என்று சொல்லும்போது, 3 வாக்கியத்தை நினைவில் கொள்ளுங்கள்.

1. **நீ அறியாத காரியம்**
2. **உனக்கு எட்டாத காரியம்**
3. **ஆராய்ந்து முடியாத காரியம்**

அந்தப் பெரிய காரியம் இயேசுவின் பிறப்பில் காணப்பட்டது.

ஆம்! பரிசுத்த கன்னிமரியாளிடம் காபிரியேல் தூதன் தேவனால் அனுப்பப்பட்டான்.

**லூக்கா 1:28** மரியாள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரிகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்.

**லூக்கா 1: 31-33** இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக.

**அவர் பெரியவராயிருப்பார்...** என்றான்.

**லூக்கா 1:34** அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும் ? புருஷனை அறியேனே என்றாள்.

ஆம்! மரியாளுக்குக இது ஒரு அறியாத காரியம், அவளுக்கு எட்டாத காரியம், ஆராய்ந்து முடியாத காரியம்.

**லூக்கா 1:29** மரியாள் தேவதூதனைக் கண்டு அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப் பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

ஆம், என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே, ஊழியக்காரரே!

நீங்கள் அறியாததும், உங்களுக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை கேட்கப் போகிறீர்கள்.

மரியாளின் தேவன் நம் தேவன். இரவும், பகலும் உபவாசித்து, ஜெபித்து, தேவனுடைய சமுகத்தில் பரிசுத்த சிந்தையோடு காத்துக் கொண்டிருக்கும் தேவ ஊழியரே, சகோதரியே, சகோதரனே!

நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை காரியங்களை கேட்கப் போகிறாய். விசுவாசத்தோடு தேவனைத் துதிப்போமா?

நம்முடைய தேவன் இல்லாதவை களை இருக்கிறவைகளாக அழைக்கிற தேவன் ( ரோமர் 4: 17 )

கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்( ஏசாயா 53:10).

**இது எப்படியாகும்?** என சிந்தித்துக்கொண்டிக்கும் தேவனுடைய பிள்ளையே, உனக்காகவே கர்த்தரின் வார்த்தை கடந்து வருகிறது.

**மத்தேயு** 19:26 மனுஷரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும்.

**பக்தன் பாடுகிறார்:–**

**கூடாதது ஒன்றுமில்லையே**
**கூடாதது ஒன்றுமில்லையே**
**என் தேவனால் கூடாதது**
**கூடாதது ஒன்றுமில்லையே**
**நீ விசுவாசித்தாலே தேவமகிமை காண்பாயே**
**பெலப்படுத்தும் கிறிஸ்துவினாலே**
**பெரிய காரியம் செய்வாயே.**

ஆம், விசுவாசத்தோடே பாடுங்கள். பாடிக்கொண்டேயிருங்கள்.

**பிலிப்பியர் 4:13** என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு. ஆமென்.

**லூக்கா 1:6** ஆசாரியன் சகரியா, அவன் மனைவி எலிசபெத் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படி யேயும் நியமங்களின்படியேயும் குற்ற மற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே!

நாம் அறியாததும், நமக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை நாம் அறிய வேண்டுமானால், ஆசாரியன் சகரியா அவரது மனைவி போன்ற குடும்ப வாழ்க்கை நமக்கு தேவையானதாக இருக்கிறது.

**மத்தேயு 8:19** உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப் பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்.

ஆம். ஆசாரியனாகிய சகரியாவும், எலிசபெத்தும் ஒருமனப்பட்டவர்களாக இருந்தார்கள். எதிலே?

1. **கர்த்தரிடத்த சகல கற்பனைகள், நியமங்களில் குற்றமற்றவர்களாய் நடந்தார்கள்.**

2. **தேவனுக்கு முன்பாக நீதியுள் ளவர்களாய் இருந்தார்கள்.**

கர்த்தருடைய ஊழியத்தை செய்யும் தேவபிள்ளையே! இந்த கிறிஸ்மஸ் காலங்களில் நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்.

பாஸ்டர் ஒரு வழி,
பாஸ்டரம்மா மற்றொரு வழியா ?
கணவன் ஒரு வழி,
மனைவி ஒரு வழியா ?
பெற்றோர் ஒரு வழி,
பிள்ளைகள் ஒரு வழியா ?
சபை போதகர் ஒரு வழி,
விசுவாசிகள் ஒரு வழியா ?

இந்த கிறிஸ்மஸ் காலங்களில் உங்கள் வாழ்க்கையை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

வசனம் கூறுகிறது: **யாக்.1:8**

"இருமனமுள்ளவன்
தன் வழிகளிளெல்லாம்
நிலையற்றவனாயிருக்கிறான்"

ஆதலால் தான் நிருபங்களில் நாம் வாசிக்கிறோம்.

**2கொரி.13:11, பிலி.2:2**

"ஏகசிந்தையாயிருங்கள்"

**பிலி.4:8**... புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.

1 தீமோ.1:15 பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகிற்கு வந்தார்.

இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்தபோது கூறினார்: **மத்.11:15**

"தரித்திரருக்கு சுவிசேஷம்
பிரசங்கிக்கப்படுகிறது"

ஆம். இரண்டு வகையான தரித்திரம்:

**1. பொருளாதாரம், நோய், மலடு, கடன், கண்ணீர், போட்டி, பொறாமை, பகை போன்ற தரித்திரம்.**

**2. ஜீவனுள்ள தேவனைக் காணாதபடி, அந்நிய தேவர்களை சேவித்து, நரகத்தை நோக்கிப் போகிற ஒரு தரித்திரம்.**

இந்த கிறிஸ்மஸ் காலங்களில் 2 காரியங்களைச் செய்வோம்.

**1. ஏழை எளிய மக்களை நினைத்துக் கொள்வோம். குஷ்டரோகிகள், அனாதைகள், விதவைகளுக்காக ஜெபியுங்கள். அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாதாமே உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்.**

**2. சுவிசேஷப் பணிக்காகவும், ஆலய கட்டுமானப் பணிக்காகவும், முழுநேர ஊழியத்திற்காகவும் உங்களை அர்ப்பணியுங்கள்.**

**யோவான் 12:26** ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.

இப்படி தரித்திரத்தை நினைத்து நம்மை அர்ப்பணித்து, தேவனை நோக்கிக் கூப்பிடும்போது, நீங்கள் அறியாததும், உங்களுக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை அறிவிப்பார். ஆமென்!

**பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.**

நான் இயேசுவை நோக்கி கூப்பிடுவேன் அப்பொழுது இயேசு எனக்கு உத்தரவு கொடுத்து நான் அறியாததும் எனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை எனக்கு அறிவிப்பார்.

**பக்தன் பாடுகிறார்:–**

**விசுவாசத்தால் பிழைத்தோங்க
வீரபாதை காட்டினீரே
வளர்ந்து கனிதரும் வாழ்வை
விரும்பி வரம் வேண்டுகிறேன்.**

**திருப்பாதம் நம்பி வந்தேன்
கிருபை நிறை இயேசுவே!**

பாடுங்கள். பாடிக்கொண்டேயிருங்கள்.

**கர்த்தர் வாக்களிக்கிறார்:–**

**பெரிய காரியங்களை
உனக்கு அறிவிப்பேன்.
தேவனுக்கே மகிமை!**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று. 2 தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

## திருச்சி மாவட்டம் - துறையூர் யூனியன்

## 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** **2008 டிசம்பர் 15** திங்கள் காலை 9 மணி முதல் **டிசம்பர் 19** வெள்ளி இரவு 10 மணி முடிய **திருச்சி மாவட்டம் – துறையூர் யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2008 டிசம்பர் 15** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2008 டிசம்பர் 19** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2008 டிசம்பர் 15 - 19 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**ஜீவனுள்ள தேவனுடைய சபை,**

**49C , மாருதி நகர்** ( யூனியன் ஆபிஸ் பின்புறம் )

**துறையூர் - 621 010.**

**திருச்சி மாவட்டம்.**

**போன் : 04327 - 256346**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர் D. ஜேம்ஸ்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# திருநெல்வேலி - ராதாபுரம் யூனியன் 100-கிராம ஊழியம் அறிக்கை

**THANKS: PATMOS ( DR. TOR & SIS.FERA)**



கர்த்தருடைய கிருபையால், **திருநெல்வேலி மாவட்டம் – ராதாபுரம்** யூனியனில் 06.10.2008 முதல் 10.10.2008 வரை **100– கிராம ஊழியம்** மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள், கடைசி நாள் கூடுமிடம் உணவு, இனிப்பு இவைகளை **திசையன்விளை பாஸ்டர் அன்பழகன் பாஸ்டர் ஜெயசீலன்** இவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களிலிருந்து 54 கிராம ஊழியர்கள் இந்த ஊழியத்தில் பங்குபெற்று ஊழியம் செய்தார்கள்.

முதல்நாள் ஜெபத்தில் ராதாபுரம் யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களை வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் TVGM– தலைமை பொறுப்பாளர் **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** அவர்களும், ஸ்தாபகர் சகோ. **P.T. கிறிஸ்டோபர்** அவர்களும் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக ஜெபித்தார்கள். **பாஸ்டர் அன்பழகன், பாஸ்டர் ஜெயசீலன்** தேவசெய்தி கொடுத்தார்கள். இதன் பின் கிராம ஊழியர்களை 11 குழுவாகப் பிரித்து அவர்கள் ஊழியம் செய்ய வேண்டிய கிராமங்களின் பெயர்பட்டியல் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு குழுவினரும் தனித்தனியாக ஜெபித்தார்கள். மதிய உணவிற்கு பின் 11 குழுவினரும் தாங்கள் செல்ல வேண்டிய கிராமங்களுக்கு ஜெபத்துடன் கடந்து சென்றனர். இவர்கள் போய் 5 நாட்கள் கிராமங்களில் தங்கி கர்த்தருக்காக ஊழியம் செய்தார்கள். ஊழியங்களை முடித்து மீண்டும் முன்பு கூடிய இடத்திலேயே ஊழியர்கள் கூடி ஜெபித்து, கர்த்தர் தங்களை கிராமங்களில் எப்படி நடத்தினார் என்பதை சாட்சியாக சொல்லி தேவனை மகிமைப் படுத்தினார்கள். இந்த யூனியனில் மொத்தம் 10,507 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 18,000 கைப்பிரதிகள், 10,000 சிலுவைக்கொடிகள் இலவசமாக வழங்கி கர்த்தரை பிரஸ்தாபப்படுத்தினார்கள்.

இவ்ழியத்தின் போது 88 பேர் தங்கள் விலாசங்களைக் கொடுத்து தங்களுக்காக ஜெபிக்கும்படியும், தபால் மூலம் வேதபாடங்களை அனுப்பும்படியும் கேட்டுக்கொண்டார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

<u>குழு 1:</u> **சகோ.தாஹாகனி, சூசை மாணிக்கம், ஸ்டேன்லி, யோசுவா, ஜோசப் பெஞ்சமின்.**

நாங்கள் பூவுடையார்புரம் கிராமத்தில் சுவிசேஷப் புத்தகங்களைக் கொடுத்துக் கொண்டு செல்லும்போது இந்த கிராமத்தை சேர்ந்த இரண்டு பேர் வந்து எங்களில் மூன்று பேரை தாக்கி, அடித்து, உதைத்து, செருப்பால் அடித்து கெட்ட வார்த்தைகளைச் சொல்லி திட்டி விரட்டினார்கள். எங்களில் மற்ற இரண்டு

பேரை கண்டபடி திட்டி அடித்து விடுவோம் போய் விடுங்கடா என்று சொல்லி துரத்தினார்கள். நாங்கள் மேலும் இரண்டு நாட்கள் நாங்கள் பதுங்கி பதுங்கி பார்த்து சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2: சகோ.மாற்கு மாரியப்பன், மகாராஜன், செல்வராயர் பால், சாமுவேல், சகாயராஜ்.**

நாங்கள் இடையன்குடியில் மற்ற மதத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகளில் யோவான் புத்தகம் கொடுத்தோம். அருள் நகர் பகுதியில் வீடுவீடாக புத்தகம் கொடுத்துக் கொண்டு வரும்போது, தசரா பண்டிகையை முன்னிட்டு வேஷம் போட்டிருக்கிற ஒருவரின் வீட்டிலும் புத்தகம் கொடுத்தோம். அங்கிருந்த ஒரு வாலிபப் பெண் **இயேசு வருவாரா ? உலகம் அழியுமா ?** என்று கேட்டாள். நாங்கள் அவளிடம் **நிச்சயமாக இயேசு வருவார். இவ்வுலகமும் அழியும். அதற்காகத் தான் நாங்கள் இந்த இயேசுவின் புத்தகத்தைக் கொடுக் கிறோம்** என்று சொன்னோம். அந்தப் பெண் **நிச்சயமாக நான் இந்தப் புத்தகத்தை படித்து இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வேன்** என்று கூறினாள். வெம்மணங்குடி கிராமத்தில் நாங்கள் நுழைந்ததுமே எங்களை தடைசெய்து புத்தகம் கொடுக்கக் கூடாது என்று சொல்லி எங்களை திருப்பி அனுப்பி விட்டனர். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3:சகோதரி எஸ்தர் கனகாம்புஜம், ஜெபமணி, கிளமெண்ட்ஸ்மேரி, சாராள், தேவநேசம்.**

முதுமொத்தன்மொழி கிராமத்தில் வீடுவீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்த போது, ஒரு சிலர் மட்டும் வாங்கினார்கள். அநேகர் வேண்டாம் என்றார்கள். மருத நாச்சிபுரம் போகும் வழியில் ஒரு வீட்டிலிருந்த நாய் எங்களில் ஒருவரை கடித்து விட்டது. ஆனாலும் கர்த்தருடைய கிருபையால் தொடர்ந்து ஊழியம் செய்தோம். 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 915 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4: சகோதரி மேரி செல்லாபாய், மணியம்மாள், தேவகிருபை, சலோமி சம்மனசு.**

எங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த 8 கிராமங்களில் ஒவ்வொருநாளும் சென்று யோவான் புத்தகம், கைப்பிரதி, சிலுவைக் கொடிகள் கொடுத்தோம். நவலடி கிராமத்தில் ஒரு வாலிபனுக்கு விபத்து ஏற்பட்டு சுயநினைவு இல்லாமலிருந்தான். எங்களை அழைத்து ஜெபிக்கும்படி சொன்னார்கள். ஜெபித்து கடந்து வந்தோம். யாரும் எங்களுக்கு எதிராக பேச வில்லை. 900 சுவிசேஷப் புத்தகங்கள், 950 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5: சகோதரி விமலா, தெபோராள், அன்னாள், கிருபா பழனியம்மாள், அபியேல் அந்தோணியம்மாள்.**

உறுமங்குளம் கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள 8 கிராமங்களிலும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, **இயேசுவே கர்த்தர்** என்று அறிவித்தோம். இஸ்லாமிய மக்களிடம் சுவிசேஷப் புத்தகம் கொடுத்த போது, ஈசாநவி என்று சொல்லி பெற்றுக் கொண்டனர். பெரிதும் சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் **சூடுஉவந்தான் விளை** கிராமத்திலுள்ள மக்கள் கூட பலர் ஆர்வமுடன் புத்தகங்களை பெற்றுக் கொண்டனர். சிலர் மட்டும் திட்டி விரட்டி னார்கள். 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 955 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6: சகோதரி மரியம்மாள், ஜோதிமணி, பாக்கியம், எஸ்தர் பேபி.**

ராதாபுரம் ஊராட்சியிலுள்ள 9 கிராமங்களில் சென்று யோவான் புத்தகம்

கொடுத்து, சத்தியத்தை அறிவித்தோம். பல வியாதியஸ்தர்களை சந்தித்து எண்ணெய் பூசி ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 845 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 7: சகோ.ஜீவானந்தம், இஸ்ரவேல், அந்தோணி, எபிநேசர், ஜான் முத்துமணி.**

உவரி, கூட்டப்பனை, கூடுதாழை, பெரியதாழை ஆகிய கிராமங்களில் வீடு வீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்து ஊழியம் செய்தோம். அநேகர் விருப்பத் துடன் வாங்கிக் கொண்டனர். சிலர் ஜெபிக்கும்படி கேட்டார்கள். இவர்க ளுக்காக ஜெபித்தோம். வெகுதூரம் நடந்து சென்று ஊழியம் செய்தோம். 750 சுவிசேஷப் புத்தகங்களும், 895 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 8: சகோதரி கிரேஸ் பத்மா, அன்னக்கிளி, லூயிஸ் அம்மாள், ரூத்மேரி.**

இட்டமொழி, பண்டாரபுரம், அழகப்ப புரம், விஜய அச்சம்பாடு ஆகிய கிராமங் களில் சுவிசேஷம் அறிவித்தோம். வீடுகளில் சுவிசேஷப் புத்தகங்களைக் கொடுத்தோம். யாவரும் அன்புடன் வாங்கிக் கொண்டனர். அநேகருக்காக ஜெபித்தோம். மொத்தம் 1004 சுவிசேஷப் புத்தகங்களும், 860 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 9: சகோதரி டோரா லாசர்,ஷீலா, அமிர்தம், அந்தோணிமேரி, சமாதானமேரி.**

கூடன்குளம் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். சிலர் நாங்கள் தரும் விபூதியை நீங்கள் போடுவீர்களா ? போட்டால் நீங்கள் தரும் புத்தகத்தை வாங்குவோம் என்றார்கள். இது சாம்பல் உயிர் இல்லை. ஆனால் இந்த புத்தகத்தில் உள்ளவை ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகள் என்று கூறிய போது, ஒரு சிலர் வாங்கிக் கொண்டார்கள். சாமியாடி ஒருவர் எங்களை இப்படி தெரு தெருவாக நீங்கள் வந்து எங்கள் பிழைப்பைக் கெடுக்காதீர்கள் என்று சொன்னார். நாங்கள் இந்தப் பகுதியில் ஊழியம் செய்வதை அறிந்த சில தீவிரவாதிகள் நேரில் வந்து நாங்கள் தங்கியிருந்த சபையின் பாஸ்டர் தானியேல் அவர்களை திட்டி வெட்டி விடுவோம் என்று எச்சரித்துப் போனார்கள். 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 870 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 10: சகோதரி கஸ்தூரி சுப்பையா, மரியாள், அக்சாள், ரூத் பகவதி, மேரி மீனா.**

நாங்கள் 10 கிராமங்களில் சுவிசேஷப் புத்தகங்கள், கைப்பிரதி மற்றும் சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.செல்வமருதூரில் கொடுக்கும்போது ஒரு பெண் இங்கு எதுவும் கொடுக்காதீர்கள். இங்கு எதிர்ப்பு அதிகம். மோசமான மக்கள். இப்போது வேஷம் போட்டு பண்டிகை கொண்டாடுகி றார்கள். வீணாக அவர்களிடம் மாட்டிக் கொள்ளாதீர்கள் என்றார். நாங்கள் மிகவும் எச்சரிக்கையுடன் அக்கிராமங்களில் கடந்து செல்லும்போது, அப்படி வேஷம் போட்டிருந்தவர்களில் அநேகர் எங்களிடம் வந்து சுவிசேஷப் புத்தகத்தைக் கேட்டு வாங்கினார்கள். இப்படி வாங்கியது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. மகாதேவன்குளம் கிராமத்தில் ஒருவர் இப்படி புத்தகங்களை கொடுத்து இந்து மதத்தை அழித்து விடாதீர்கள் என்றார். வெத்திலைரோடு பகுதியில் எங்களைப் பார்த்து சில வேஷம் போட்டவர்கள் இவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுப்பார் களோ என்று சொல்லிக் கொண்டார்கள். மொத்தம் நாங்கள் 1150 சுவிசேஷப் புத்தகங்களும், 880 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 11:</u> பாஸ்டர் ஆல்வின், சகோ.ஜெபமலைநாதன், ஆரியப்பன், பீட்டர் ராமலிங்கம், இஸ்தாக்கி, தாவீது தங்கவேல்.**

இடச்சிவிளை கிராமத்தில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, ஒரு சகோதரன் ஏன் உங்களுக்கு வேறு வேலையே இல்லையா ? இந்து மதத்தை ஒழித்தே தீர வேண்டும் என்று முடிவு பண்ணி விட்டீர் களா ? நாட்டை ஏன் கெடுக்கிறீர்கள். மரியாதையாக இங்கிருந்து போய் விடுங்கள். இல்லையென்றால் என்ன நடக்கும் என்று தெரியாது என்று சொல்லி எங்களை துரத்தினான். அப்புவிளை கிராமத்திலும் சுவிசேஷப் புத்தகங்களைக் கொடுத்துக் கொண்டு வரும்போது ஒரு மனுஷன் எங்களை மோசமாக திட்டிக் கொண்டு அடிக்க ஓடி வந்தார். உடனே அவருடைய மனைவி ஓடி வந்து அவரை கேட்டைத் தாண்டி விடாமல் தடுத்துக் கொண்டார். பிறகு நாங்கள் அங்கியிருந்து போய் விட்டோம். மொத்தம் 703 சுவிசேஷப் புத்தகங்களும், 980 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

## 2008 டிசம்பர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : திருவண்ணாமலை
யூனியன் : புதுப்பாளையம்
நாள் : 20.12.2008 சனி
நேரம் : காலை 9 மணி

**<u>நடைபெறும் இடம்</u>**

**Bro. R. தாஸ் Rtd.H.M.**
**அடைக்கல நாதர் A.L.C சர்ச்**
**செங்கம் கண் ஆஸ்பத்திரி அருகில்**
**செங்கம் – 606 709.**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**போன் : 04188 222890**

## அக்டோபர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை



கர்த்தருடைய கிருபையினால் கோயம்புத்தூர் மாவட்டம் – குடிமங்கலம் யூனியனில் 18.10.2008 அன்று இயேசுவை விரும்புவோர் முகாம் ஒழுங்கு செய்யப் பட்டு, குடிமங்கலம் தேவனுடைய வீட்டில் வைத்து நடைபெற்றது.

இம்முகாமில் அழைப்புக் கடிதம் பெற்றுக்கொண்டவர்களில் 4 பேர் மட்டும் ஆர்வமுடன் வந்து கலந்து கொண்டனர். இவர்களுக்கு இயேசுவின் அன்பையும், அவர் தருகிற நித்திய ஜீவனையும் குறித்து சொல்லப்பட்டது. இவர்கள் தேவைகளுக்காக, பிரச்சனைகளுக்காக ஜெபித்து ஆலோசனை கூறினோம். தொடர்ந்து சபைக்கு வருவதாக கூறினார்கள். குடிமங்கலம் தேவனுடைய வீடு பாஸ்டர் எபிநேசர் அவர்கள் ஜெபித்து ஆசீர்வாதம் கூறி முடித்தார்கள்.

**தேவனுக்கே மகிமை!**

## நன்றி

2008ம் ஆண்டு முழுவதும் TVGM ஊழியங்களுக்காக ஜெபித்த, கொடுத்த, உழைத்த 100– கிராம ஊழிய பத்திரிக்கை வாசகர்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக!

**தேவனுக்கே மகிமை**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

### விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

1. Sis.**அன்னாள், தூத்துக்குடி.**

2007ம் ஆண்டில் 100–கிராம ஊழியம் பத்திரிக்கையில் **"உன் சத்துருக்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன்"** என்ற வாக்குத்தத்த செய்தி வந்தது. உனக்கு திருமணம் நடைபெறாது, அதையும் பார்ப்போம் என்று பலர் சவால்களுடன் காணப்பட்டார்கள். கர்த்தரோ எல்லா தடைகளையும் நீக்கினார். வாக்குத்தத்தம் வந்த சில நாட்களுக்குள்ளாகவே என் திருமணம் ஒழுங்கானது. கர்த்தர் எனக்கு ஏற்றத் துணையை தந்து அவர்களின் கண்களுக்கு முன்பாகவே என்னை மேன்மைப்படுத்தினார்.

2. Sis.**ஸ்டெல்லா ஸ்டேன்லி, கரூர்.**

கடந்த ஜுன் மாதத்திலிருந்து இலவச டியூசன் சென்டர் நடத்துவதற்காக ஜெபித்துக் கொண்டிருந்தோம். அதை நடத்துவதற்கான ஆர்டர் கிடைக்காமல் இருந்தது. அது கைவிட்டு போகிற சூழ்நிலையில் மிகவும் பாரத்தோடு ஜெபித்தோம். 2008 ஜுன் மாதம் 100–கிராம ஊழிய பத்திரிக்கையில் **"அதைப் பின்தொடர், அதை நீ பிடித்து சகலத்தையும் திருப்பிக் கொள்வாய்"** என்ற வாக்குத்தத்த வசனம் வந்தது. வாக்குத்தத்தத்தை பிடித்துக் கொண்டு ஜெபித்தேன். என்ன ஆச்சரியம். ஜுன் 13ம் தேதியிலிருந்து டியூசன் சென்டர் நடத்த என் தேவன் கிருபை செய்தார்.

3. Sis.**மெல்வின், கன்னியாகுமரி.**

நான் Type writing Exam- க்காக ஜெபிக்கக் கேட்டிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள்.கர்த்தர் வெற்றியை தந்தார்.

4. Sis.**மோகனா, காஞ்சிபுரம்.**

எனக்கு BP இருப்பதால் குழந்தை வளர்ச்சியில்லாமல் இருக்கிறது என கூறி விட்டார்கள். குழந்தை நன்றாக பிறந்தால் TVGM–க்கு சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். உங்களிடமும் ஜெபிக்கக் கேட்டிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 21.09.08 அன்று பெண் குழந்தையை கொடுத்தார்.

### புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

1. Sis.**தெய்வானை, சேலம்.**

என் மகளுக்கு குழந்தையில்லை என்று ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். உங்கள் ஜெபத்தினால் இப்பொழுது மகள் 5 மாத கர்ப்பிணியாக இருக்கிறாள்.

2. Sis.**கீதா, திருவாரூர்.**

என் அக்காவிற்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டுமென்று வெள்ளிக் கிழமை உபவாச ஜெபத்தில் ஜெபக்குறிப்பு எழுதி கொடுத்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு சுகபிரவசத்தில் ஆண்குழந்தையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை.

### 2009 ம் ஆண்டுக்கான 100–கிராம ஊழியம் மாதாந்திர பத்திரிக்கையின் சந்தா செலுத்தி விட்டீர்களா?

சந்தா செலுத்த முடியாதவர்கள் தபால் மூலம் தெரிவித்தால் பத்திரிக்கை 2009க்கு மட்டும் இலவசமாக அனுப்பி வைக்கிறோம்.

தயவு செய்து தொலைபேசி மூலமாக மட்டும் அல்ல, தபால் மூலமும் உங்கள் முகவரியை தெரியப்படுத்தி உதவுங்கள்

## 2009ல் - "உன் பொருத்தனைகளைச் செலுத்து" நாகூம் 1:15

**பின்வரும் கிராமங்களில் ஜெபவீடு கட்டுவதற்கு நிலம் ஆயத்தம். கட்டி தருவதற்கு நீங்கள் ஆயத்தமா?**



தென்நகர் – புதுக்கோட்டை Dt.,



பொன்மலைப்பட்டி – திருச்சி Dt.,



அக்ரஹாரம் – புதுக்கோட்டை Dt.,



ஆத்தூர் AMC காலனி– சேலம் Dt.,

**குறிப்பு :** நீங்களும் குடும்பமாகவோ அல்லது சபையாகவோ ஒரு ஜெபவீட்டை தேவனுடைய மகிமைக்கென்று டி.வி.ஜி.எம். மூலம் ஆலயமில்லாத கிராமத்தில் கட்டிக் கொடுக்க விரும்பினால் தயங்காமல் எங்கள் ஈமெயில் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். ( 1 சதுர அடிக்கு – ரூ. 400 ) = கல் கட்டடம்.

**மாடல் 1:** ஜெபவீட்டின் அளவு – 15' X 30' = 450 சதுர அடி = ரூ.1,80,000

**மாடல் 2:** ஜெபவீட்டின் அளவு – 20' X 40' = 800 சதுர அடி = ரூ.3,20,000

**மாடல் 3:** தற்காலிக கூடாரம் – ரூ.50,000 **முதல்** ரூ.70,000

கர்த்தரின் வழிநடத்துதலின்படி பொறுப்பேற்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



**கடையம் பாஸ்ட்ரேட் திருச்சபை மக்கள் மிகுந்த பிரயாசத்துடன் கட்டி வரும் காவூர் கிராம ஆலயப் பணி சீக்கிரம் முடிவடைந்து 2008 டிசம்பருக்குள் பிரதிஷ்டை நடைபெற ஜெபியுங்கள். குருவானர் மதுரம் அவர்களுக்காகவும், திரு.ஞானக்கண் செல்வராஜ்** RTD.BDO. **அவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.**



**நீங்கள் ஜெபித்து பொருளுதவியினால் தாங்கி வரும் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகள் மற்றும் ஊழியர்களுக்கு கிறிஸ்மஸ் அன்பளிப்புகள் வழங்க முன்வருவீர்களா?**

| பிள்ளைகள், ஊழியர்கள் விரபம் | | மொத்த நபர்கள் |
|---|---|---|
| ஒரு சிறுவனுக்கு கிறிஸ்மஸ் துணி | ரூ. 300 | 75 |
| ஊழியர் ஒருவருக்கு அன்பளிப்பு | ரூ. 1,000 | 40 |
| ஊழியர் குடும்பம் ஒன்றிற்கு | ரூ. 2,000 | 4 |
| 100 கிராம ஊழியர் ஒருவருக்கு | ரூ. 300 | 60 |
| விதவைகள், முதியோர் ஒருவருக்கு | ரூ. 200 | 40 |
| தொழுநோயாளர் ஒரு குடும்பத்திற்கு | ரூ. 1,000 | 15 |
| கிறிஸ்மஸ் நிகழ்ச்சி பரிசு, விருந்து | ரூ.15,000 | |

**மொத்தம் ( உத்தேசமாக)** Rs.1,26,500

**இம்மாபெரும் தேவையில் உங்கள் பங்கு என்ன?**

## E.mail வசதி உங்களிடம் உள்ளதா?

உங்களில் அநேகருக்கு E.Mail வசதி உள்ளது. ஆனாலும் நீங்கள் எங்களுக்கு உங்கள் E.Mail IDயை தெரிவிக்காதபடியால் உங்களோடு உடனுக்குடன் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் உள்ளோம்.

ஒருவேளை உங்களுக்கு E.Mail ID இல்லாமல் இருக்கலாம். ஆனால் உங்கள் பிள்ளைகள் அல்லது உங்கள் நண்பர்களுக்கு கட்டாயமாக இந்த வசதி இருக்கும் . ஆதலால் தயவு கூர்ந்து அவர்கள் E.Mail IDயையாவது அவர்கள் அனுமதியின் பேரில் வாங்கித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

TVGM E.Mail ID : **100Village@tvgm.org**

## இன்டர்நெட் வசதி உங்களிடம் உள்ளதா?

மாதந்தோறும் முதலாம் வாரம் TVGM Website ல் முந்தின மாதம் நடந்த நிகழ்ச்சிகள் போட்டோவுடன் வெளிவருகிறது. மற்றும் TVGM பாடல் கேசட், வீடியோ, சாட்சி புத்தகம், முத்தான 100 வாக்குத்தத்த செய்தி யாவும் உள்ளது. தவறாமல் பாருங்கள். **www.tvgm.org.**

**அறுப்பு மிகுதி, வேலை ஆட்களோ கொஞ்சம்.** மத்தேயு 9:37

## TVGM தலைமை அலுவலகத் தேவைகளுக்காக
**ஜெபியுங்கள்! அறிமுகப்படுத்துங்கள்! அர்ப்பணியுங்கள்!**

1. முன் அனுபவம் உள்ள Accountant - தமிழ் , ஆங்கிலம் டைப் தெரிந்த Computer படித்த கர்த்தருடைய பிள்ளைகள் தேவை.
2. MSW, MBA, Photo Shop, Web Designer தேவை.
3. கார் ஓட்டும் லைசன்ஸ் உள்ள, பட்டணங்களில் கார் ஓட்டி அனுபவம் உள்ள மெக்கானிசம் சிறிதளவாவது தெரிந்த அம்பாசிடர் கார் டிரைவர் தேவை.
4. TVGM சிறுவர் இல்லப்பிள்ளைகள் 1 முதல் 12-ம் வகுப்பு வரை படித்து வருகிறார்கள். வரும் கல்வியாண்டில் கல்லூரி செல்கிறார்கள். ஆதலால் இவர்களை கவனிக்க பாடம் சொல்லிக் கொடுக்கும் தாலந்துள்ள வார்டன் தேவைப்படுகிறார்கள்.
5. மற்றும் அநேக முக்கிய தேவைகளுக்கு முழு நேரப் பணிக்கு ஒப்புக்கொடுத்த ஆத்தும பாரமுள்ள ஆட்கள் தேவைப்படுவதால் தயவு கூர்ந்து சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபருடன் தொடர்புகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
6. முதலாவது போட்டோவுடன் முழு விவரத்தையும், முன் அனுபவங்களையும் (அனைத்து சான்றிதழ் ஜெராக்ஸ் காப்பியுடன்) எதிர்பார்க்கும் சம்பளத்தையும் குறிப்பிட்டு தபால் அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
7. தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் மட்டும் போதாது. உடனே தபால் மூலமும் முழு விவரத்தையும் தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
8. தபால் மூலம் விண்ணப்பிக்காமல் தொலைபேசியில் மட்டும் வேண்டுகோள் கொடுப்பது மறந்து போவதற்கு ஏதுகரமாக உள்ளது.
9. கர்த்தருடைய சேவைக்கென்று தங்களை முழுநேரமாக அர்ப்பணிக்கிற பிள்ளைகள் தயவு செய்து பின்பக்க அட்டையில் உள்ள முகவரிக்கு தொடர்பு கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை மற்றும் வாக்குத்தத்த தேவசெய்தி

**நாள் : 01.12.2008** திங்கட்கிழமை

**துதி ஆராதனை நேரம் :** காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை

**வாக்குத்தத்த செய்தி :** மாலை 7 மணி முதல் 8 மணி வரை

**நடைபெறுமிடம் : TVGM தலைமை அலுவலகம்,**
**100 - கிராமம்,**
**திருச்சி - 620 102.**

சபை பாகுபாடின்றி அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

# திருநெல்வேலி மாவட்டம் - கோடாவிளை
# TVGM பெண்கள் முதியோர் இல்லம்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் 2008 நவம்பர் 2ம் தேதி ஞாயிறு மாலை 4மணிக்கு கோடாவிளை கலிலேயா காம்பவுண்டில் TVGM வயோதிப பெண்கள் இல்லக் கட்டட திறப்புவிழா நடைபெற்றது.

க. புதுார் பாஸ்ட்ரேட் சேர்மன் Rev. மேசியா அவர்கள் ஜெபித்து தேவ செய்தி அளிக்க, சகோதரன் K.P.K. ஜெயக்குமார் அவர்கள் தேவனுடைய மகிமைக்கென்று ஜெபத்துடன் திறந்துவைத்தார்கள். மரக்காட்டுவிளை A.G. பாஸ்டர் . மேசியா அவர்களும், பாஸ்டர். ஜெயசீலன் அவர்களும் மற்றும் பலரும் கலந்துகொண்டு திறப்புவிழாவை சிறப்பித்தார்கள்.

ஆனாலும் முதியோர் இல்லத்திற்கு தேவைப்படும் 10 கட்டில்கள், நாற்காலிகள், மேஜைகள், சமையல் பாத்திரங்கள், படுக்கை வசதி போன்றவைகளும்,மின்சார வசதிகளும் இன்னமும் செய்யப்படாமலிருப்பதால் அதில் முதியோர்களை வைக்கமுடியாமல் தாமதித்துக் கொண்டிருக்கிறோம்.

மேலும் 4 முதியோர்கள் திருநெல்வேலி மாவட்டத்திலும், ஒரு முதியவர் சேலம் மாவட்டத்திலும் வாய்மொழியாக விண்ணப்பித்துள்ளார்கள் . இவர்களை கவனிக்க அர்ப்பணிப்புள்ள ஒரு குடும்பம் நமக்கு கிடைக்காத படியால் அவர்களுக்கு இன்று வரை அட்மிசன் கொடுக்க முடியவில்லை.

மேலும் முதியோர்களைத் தாங்குவதற்கு இன்னும் பொருளாதார வாசல் நமக்கு திறக்கப்படவில்லை. ஆனாலும் தேவன் கொடுத்த வாஞ்சையின் படியாக கட்டிடத்தின் ஒரு பகுதியை கட்டி முடிக்க கர்த்தர் கிருபை செய்துள்ளார்.

கட்டிடப் பணியை இதுவரை பொறுப்பாக கவனித்து வரும் நமது சகோதரன். K.P.K. ஜெயக்குமார் அவர்களுக்காக விசேஷமாக ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். சகோதரன் அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு ஜெபத்துடன் இப்பொறுப்பை ஏற்று திரு. ரெத்தினம் ஆசிரியர் மற்றும் சகோதரன் மனோகருக்கு உதவியாக செயல்பட்டு வருகிறார்கள்.

மேலும் கோடாவிளை முதியோர் இல்லக் கட்டிடப் பணியில் மற்றொரு பகுதி அஸ்திபாரம் போடப்பட்ட நிலையில் அப்படியே உள்ளது.

சராசரியாக 1 அடி கட்டுவதற்கு ரூ 450 தற்சமயம் தேவைப்படுகிறது. இதுவரையிலும் நடத்தின தேவன் தொடர்ந்து நடத்தும்படி ஜெபியுங்கள்.

இன்னும் முதியோர் இல்லத்திற்கு ஒரு காவல்காரர் கிடைக்க ஜெபியுங்கள். அத்துடன் அங்கு கட்டப்பட்டுள்ள டாக்டர். லாரன்ஸ் ஜெப அறைக்காக துதியுங்கள். இங்கு அந்த வட்டாரத்திலுள்ள கர்த்தருடைய பிள்ளைகள் வந்து கூடி ஜெபித்து தேவனை மகிமைப்படுத்த வாஞ்சிக்கிறோம்.

குண்டல் சிறுவர் இல்லத்தில் 5ம் வகுப்பு படித்து முடிக்கும் பெண் பிள்ளைகள் தொடர்ந்து கோடாவிளை கலிலேயா காம்பவுண்டில் தங்கி படிக்கப் சிறுவர் இல்லம் விரிவாக்கம் செய்ய வாஞ்சிக்கிறோம். ஜெபியுங்கள்.

## நாட்டு நடப்புச் செய்திகள்

1. திருப்பூர் புதிய மாவட்டமாக உதயமாகியுள்ளது. இத்துடன் 32 மாவட்டங்கள் தமிழகத்தில் உள்ளன.

2. நியாயவிலைக் கடைகளில் ரூ.50/–க்கு மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டத்தை அக்டோபர் 2ம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.கருணாநிதி துவக்கி வைத்தார்.

3. அமெரிக்காவில் திவாலான நிதி நிறுவனங்களைக் காப்பாற்ற அமெரிக்க அரசு ரூ.32 லட்சம் கோடி வழங்க உறுதியளித்துள்ளது. இதற்கு அந்நாட்டு செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது.

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** 2008 ம் ஆண்டு கர்த்தர் அநேக ஊழியர்களுக்கு TVGM மூலம் கட்டிக் கொடுத்த ஒவ்வொரு ஜெபவீட்டிலும் துதி ஆராதனை மாதந் தோறும் நடைபெற ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** கோடாவிளையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பெண்கள் முதியோர் இல்லத்திற்காகவும், இதில் தேவன் மேல் விசுவாசம் உள்ள கைவிடப்பட்ட ஏழை முதியோர்கள் பயன்பெறும்படியாகவும், இதை கவனிக்க தரிசனம் பெற்ற ஒரு அர்ப்பணிப்புள்ள குடும்பத்தை கர்த்தர் கிருபையாக தர ஜெபியுங்கள்.

**புதன்:** TVGM தலைமை அலுவலகத்தில் கர்த்தர் கிருபையாக கொடுத்துள்ள சிறிய நிலத்தில் முதல் கட்டமாக **TVGM Leadership Training Centre** விசுவாசத்தை மூலதனமாக வைத்து கட்டட வேலை ஆரம்பிக்கவும், ஏற்ற நேரத்தில் தலைவர் பயிற்சி முகாம் நடைபெறவும் கருத்தாய் ஜெபியுங்கள்.

**வியாழன்:** TVGM தலைமை அலுவலகத்தில் உள்ள சமூக சேவை நிலத்தில் 100 திக்கற்ற சிறுவர்கள் தங்கிப் படிக்க வசதியான கட்டடம் கட்ட கர்த்தர் நம் விசுவாசத்தைப் பெருகப் பண்ண ஜெபியுங்கள்.

**வெள்ளி:** TVGM Trustக்கு விண்ணப்பித்துள்ள FCRA ஆர்டர் விரைவில் கிடைக்கவும், தடைகள் யாவும் இயேசுவின் நாமத்தினால் அகன்று போகவும் ஜெபியுங்கள்.

**சனி:** TVGM சமூகசேவைக்கு 80 G வருமானவரி விலக்கு ஆர்டர் கிடைக்கவும், தொடர்ந்து சிறுவர் இல்ல பிள்ளைகளுக்கு கோட்டா அரிசி வாங்க உத்தரவு கிடைக்கவும் ஜெபியுங்கள்.

**ஞாயிறு:** TVGM தலைமை அலுவலக நிர்வாகத்திற்கு அனுபவம் உள்ள Tally படித்த அல்லது வேறு Accounts படித்த அர்ப்பணிப்புள்ள கர்த்தருடைய பிள்ளைகள் தானாக விண்ணப்பிக்க ஜெபியுங்கள்.

## கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு காணிக்கை அனுப்பும் முறை

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)

**T.V.G.M. SOCIAL SERVICE** (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)

**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம்)

ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து

**MR. STEPHEN CHRISTOPHER, SB 1249101 18538 CANARA BANK,**

**Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu.**

**என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, கடைசி பக்கமுள்ள TVGM தலைமை அலுவலக முகவரிக்கு நோக்கத்தையும் உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு அனுப்பி உதவுங்கள்.**

**எங்கள் Email: 100village@tvgm.org- மூலம் தெரியப்படுத்துங்கள்.**

**Canara Bank Indian Financial System Code( IFSC ):CNRB 0001249**

## கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலக ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் அக்டோபர் மாத ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார்.

தெங்கம்புதூர் CSI சபையில் 10 ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப் பணி செய்தோம். மீண்டும் அக்டோபர் 26ம் தேதி அங்கு சென்று தேவசெய்தி கொடுத்து ஊழிய அறிமுகம் செய்ய கர்த்தர் வழிநடத்தினார். அறிமுகப் பணியில் தற்போது இருக்கும் 9 சகோதரிகளும் சென்று சிறப்பான ஒரு அறிமுகப் பணியின் புதுப்பித்தலைச் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். சபை குருவானவர், செயலர் மற்றும் கமிட்டி அங்கத்தினர், சபையார் யாவரும் கொடுத்த பரிபூரண ஒத்துழைப்பிற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம்.

மேலும் அருகிலுள்ள மற்றொரு சபையிலும் அனுமதி கேட்டு கடிதம் கொடுத்துள்ளோம். சுவிசேஷ ஊழியம் தொடர்ந்து நடைபெற ஜெபியுங்கள். மாதந்தோறும் நம் அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் ஜெபக்குறிப்புகளை வைத்து நம் 10 ஜெபக்குழுவினரும் ஜெபிக்கும் ஜெபங்கள் இவ்வூழியத்தின் வளர்ச்சிக்கு அடிப்படை காரணமாக அமைந்துள்ளது. **தேவனுக்கே மகிமை!**


**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001.
**செல் : 98658 26424**
**போன் : 04652- 277251.**

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவாஞ்சலின்,**
ஒருங்கிணைப்பாளர்.
கன்னியாகுமரி மாவட்டம்.



Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

POSTAL REGISTRATION NUMBER
TN / TR / 17 / 2006 - 2008 ( Inland )
LICENCED TO POST WITHOUT PREPAYMENT
TN / TR / 09 / WPP ( Inland ) Posting Date 25th at H.P.O. Trichy.

## TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகள் உங்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்துதல் கூறுகிறார்கள்.




**ஜெபம் :-** **அன்புள்ள இயேசப்பா!** 2008ம் வருடம் முழுவதும் எங்களை கண்மணிபோல் காத்து, வழிநடத்தினதற்காக உமக்கு ஸ்தோத்திரம். எங்களுக்காக ஜெபித்த, கொடுத்த **100– கிராம ஊழிய பத்திரிக்கை** வாசகர்கள் அனைவருக்கும் இ;ந்த கிறிஸ்மஸ் நாட்கள் இன்பகரமாக இருக்க உதவி செய்யும். இயேசுவின் மூலம் ஜெபிக்கிறோம். பிதாவே. ஆமென்!

TVGM தலைமை அலுவலக முகவரி
ஜெபஉதவி மற்றும் சகல தொடர்புகளுக்கும்:–
MR.STEPHEN CHRISTOPHER,
CHIEF EXECUTIVE OFFICER
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
100- VILLAGE ( Veeranginallur Road )
SOMARASAMPETTAI,(Hospital Stop)
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0-431 - 2607241
FAX : 0-431- 2607446
Email :
100village@tvgm.org

Website :
www.tvgm.org

தினசரி வாக்குத்தத்தம், செய்தி மற்றும் கிராம ஊழிய அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011

HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
ഹണ്ട്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി हन्ड्रेड विलेज मिनिस्ट्री